(3) திரு. கி. பெ. காத்தமுத்து

ஆகிய உறுப்பினர்களை மேற்படி வாரியத்தின் உறுப்பினர்களாக இப்பேரவை தேர்ந்தெடுத்தபடியாலும்,

1980 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டதன் காரணமாக மேற்கண்ட பிரிவின் (2) உட்பிரிவைச் சேர்ந்த (f) பகுதியில் குறிப்பிட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் மேற்கண்ட பிரிவின் உட்பிரிவைச் சேர்ந்த 5 (f) பகுதியின் படி 17—2—1980 ஆம் நாளன்று முடிவடைந்து விட்டபடியாலும்;

1959 ஆம் ஆண்டு, தமிழ்நாடு நில மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) 8வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியையொட்டி மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் ஒரு நாளன்று மேற்கண்ட வாரியத்தின் உறுப்பினர்களாக இருக்கும்படி சட்டமன்றப் பேரவையின் மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க இப்பேரவை முற்படுமாக''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

## 2. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

### (இ) நில மேம்பாட்டு வாரியம்—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நியமனத் தாள்களை 27—1—1981, செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்க்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 28—1—1981 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 29—1—1981 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பெறவேண்டிய எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 31—1—1981 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் உள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.